மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் தியாகராஜன் அவர்கள் கேள்விக்கு இதைத்தான் பதில் சொன்னேன். மின்சாரக் கட்டணம் என்பது ஒரு துளி போன்றது. சுங்க வரியின் அழுத்தம் வேறு. உறுப்பினர் தாமோதரன் அவர்கள் சொல்லியதைப் போன்று மூலதனம். ஏற்கனவே பழுதான இயந்திரங்கள், பருத்தியின் விலை உயர்வு மார்க்கெட் கிடைக்காத தன்மை, விலை அபாயத்தைப் பற்றிய சமாசாரங்கள் வருகிற லாபத்தை மீண்டும் எந்தத் தொழிலுக்கு செலுத்துவது என்ற தன்மை, அண்டை மாநிலமான கேரளம், ஆந்திர போன்றவற்றில் மில்களிலே நூல் தயாரிக்கும் நிலைமை, மீண்டும் இங்கே கம்போசிட் மில் மூலம் வரும் துணி நூல் இல்லாத தன்மை, இவ்வளவும் சேர்ந்து இன்றைக்குத் தமிழ்நாட்டுப் பஞ்சாலைத் தொழிலுக்கு பல நெருக்கடிகள் உள்ளன. ஆகையால் விற்பனை வரி மின்சாரக் கட்டணச் சலுகைகள் எல்லாம் பெரிய பிரச்னைகளில் ஒரு சிறிய அம்சம்தான்.

Export of Bananas.

* 81 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :

(*a*) the names of the other States and foreign countries to which bananas are exported from Tamil Nadu ; and

(*b*) the value of bananas exported in 1967-68?

வாழைப் பழங்கள் ஏற்றுமதி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினைகளுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) தமிழகத்திலிருந்து உற்பத்தியாகும் வாழைப்பழங்கள் எந்தெந்த வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பப் படுகின்றன ?

(இ) 1967-68-ஆம் ஆண்டில் எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள வாழைப் பழங்கள் அனுப்பப்பட்டன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) 1967-68-ம் ஆண்டில் வாழைப்பழங்கள் தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவில்லை. ஆனால் மாநிலங்களுக்கு இடையில் விற்பனை அடிப்படையில் தமிழ்நாட்டிலிருந்து மைசூர், கேரள மாநிலங்களுக்கு வாழைப் பழங்கள் விற்பனை செய்யப்பட்டன.

(இ) மாநிலங்களுக்கு இடையிலான விற்பனை அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட வாழைப் பழங்களின் தோராய மதிப்பீடு ரூ. 2.5 கோடியாகும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, சமீபத்தில் குஜராத் மாநில சர்க்கார் பாரசீக வளைகுடா பக்கமுள்ள நாடுகளுக்கும், அரேபிய நாடுகளுக்கும் 4 கோடி ரூபாய் அளவுக்கு வாழைப் பழங்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருப்

பதாகத் தெரிகிறது. அதைப்போன்ற 'மோரிஸ்' வாழைப் பழங்கள் எங்கள் பகுதியில் அதிகமாக உற்பத்தியாகின்றன. ஜப்பான் போன்ற நாடுகளுக்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று நீண்டநாட்களாக முயற்சிகள் நடந்து வருகின்றன. நம்முடைய அரசும் குஜராத் சர்க்காரைப்போல முயற்சி எடுத்து தமிழகத்திலிருந்து வாழைப் பழங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கடந்த இரண்டு ஆண்டுகளில் ஜப்பானிய வணிகக் குழுவினர், வேலூர், தேனி ஆகிய இடங்களிலுள்ள வாழைப் பழத் தோட்டங்களைப் பார்வையிட்டனர். அவர்கள் 1,500 டன் வாழைப் பழங்கள் கப்பல் மூலமாக ஏற்றுமதி செய்யவேண்டுமென்று கோரினர். ஆனால் வெளி மாநிலங்களில் விற்கும் விலையும் ஜப்பானிய நாட்டின் விலையும் குறைவாக இருந்தன. அந்த விலையால் தேனியிலுள்ள விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தால்தான் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : அமைச்சர் சொல்வதற்கு மாறாக நான் கேள்விப்பட்டேன். 'கோல்டு ஸ்டோரேஜ் சிஸ்டத்'தில் ஏற்றுமதி செய்யவேண்டுமென்றால் ஒரு கப்பல் முழுவதும் வேண்டிய வாழைப் பழங்கள் தேவைப்படுகின்றது. தேனியில் கிடைக்கும் வாழைப் பழங்கள் அந்த அளவிற்கு இல்லாததால் அவ்வளவு கொடுக்க இயலாது என்று தேனிக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள். மேலும் பல பகுதியிலிருந்தும் சென்னையிலிருந்தும் நாகையிலிருந்தும் ஒரு கப்பல் முழுவதும் ஏற்றுமதி செய்யலாம் என்று கோரிக்கை செய்திருக்கின்றனர். அதை இப்போதாவது இந்த அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் எதிர்க் கட்சித் தலைவருக்குக் கிடைத்திருக்கிற தகவல் சரியானதல்ல. விவசாயிகளுக்கு சப்சிடி கொடுத்து அதன் மூலம் ஏற்றுமதி செய்தால்தான் உற்பத்திச் செலவு கட்டுப்படியாகும். அதனால்தான் ஏற்றுமதி செய்வது நிறுத்தப்பட்டது.

திரு. எம். எத்திராஜுலு : தமிழகத்திலிருந்து ஏற்றுமதியாகும் வாழைப் பழங்கள் மூலம் நம்முடைய நாட்டிற்கு எவ்வளவு அன்னிய செலாவணி கிடைக்கிறது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : என்னுடைய முதல் பதிலிலேயே சொன்னேன். அதைக் கூர்ந்து கவனித்திருந்தால் தெரிந்திருக்கும். வெளிநாடுகளுக்கு எதுவும் ஏற்றுமதியாகவில்லை. அதனால் அந்நிய செலாவணிக்கு இடமில்லை.

திரு. டி. கே. ஷண்முகம் : இங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் வாழைப் பழங்களில் அதிகமாக ஏற்றுமதியாகும் வாழைப் பழம் எந்த வகையைச் சேர்ந்தது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வெளிநாடுகளுக்கு எந்த விதமான வாழைப் பழமும் ஏற்றுமதியாகவில்லை.